


**25.02.2025**

**தலைப்பு செய்திகள்**

- சர்வதேச தேக்க நிலையிலும் இந்தியா வேகமான வளர்ச்சி கண்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

- இந்திய கடலோர காவல் படையின் நிறுவன தினத்தை ஒட்டி மத்திய அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வீர தீர விருதுகளை இன்று புதுதில்லியில் வழங்கினார்.

- புனித ரமலான் நோன்பை முன்னிட்டு 7 ஆயிரத்து 920 மெட்ரிக் டன் பச்சரிசி பள்ளிவாசல்களுக்கு வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

- வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

- ஜெர்மன் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் **Krishnamurthy, Sai Pratheek** இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பிரதமர்**

சர்வதேச தேக்க நிலையிலும் இந்தியாவின் துரித வளர்ச்சி குறித்து உலக வல்லுநர்கள் நம்பிக்கையுடன் உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் குஹாட்டியில் முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு உச்சிமாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், அடுத்த 25 ஆண்டுகள் மேம்பாட்டை இலக்காக கொண்டு அடுத்தடுத்து வளர்ச்சி பாதையில் நம்நாடு முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

இளைய தலைமுறையினரின் திறன்வளர்ச்சியோடு நம் நாடு வேகமாக முன்னேறிவருவதை சுட்டிக்காட்டிய பிரதமர் நடுத்தர வர்க்கத்தினரும் புதிய கனவுகளுடன் வளர்ந்து வருவதாக குறிப்பிட்டார்.

இந்த இரண்டு நாள் உச்சிமாநாட்டில் தொழில்துறை வளர்ச்சி உலக அளவிலான வர்த்தக ஒத்துழைப்பு சிறுகுறு தொழில் நிறுவனங்களின் எழுச்சி குறித்த பல்வேறு அமர்வுகள் இடம்பெறுகின்றன.

சிறப்பு கண்காட்சிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

**நாடாளுமன்ற குழு கூட்டம்:**

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற வளாகத்தில் பிஜேபி உறுப்பினர் திரு.சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான திருமதி. பன்சூரி ஸ்வராஜ், காங்கிரஸ் கட்சியின் திருமதி.பிரியங்காகாந்தி, திரு.மணீஷ்திவாரி,லோக் ஜன் சக்தியின் திருமதி. சாம்பவி சவுத்ரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி யு.யு.லலித்,

சட்ட ஆணைய தலைவர் நீதிபதி **ரித்துராஜ் அவஸ்தி** ஆகியோர் தங்களது கருத்துக்களை கூட்டுக்குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

***********

**கடலோர காவல்படை**

இந்திய கடலோர காவல் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், கடலோர காவல்படை பணியாளர்களுக்கு வீர தீர விருதுகளையும், சிறப்பாக செயல்பட்டமைக்கான பதக்கங்களையும் இன்று வழங்கினார்.

இந்நிகழ்வில் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு.சஞ்சய் சேத்,

பாதுகாப்பு செயலர் ராஜேஷ்குமார்சிங்

இந்திய கடலோர காவல் படையின் தலைமை இயக்குனர் திரு.பரமேஸ் சிவமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

***********

**ரிசர்வ் வங்கி**

நாட்டின் தனியார்துறை தொழிற்சாலைகள் 2023-24-ஆம் நிதியாண்டில் கடன் சுமை குறைப்போடு அதிக அளவு லாபத்தை ஈட்டியுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிறுவனங்களின் செயல்பாட்டு லாப திறன் 15.3 சதவிகிதம் உயர்ந்ததாகவும்,

இது அதற்கு முந்தைய ஆண்டு 4.2 சதவிகிதமாக இருந்ததாகவும் வங்கி சுட்டிக்காட்டியது.

உற்பத்திசார்ந்த லாபம் 13.2 சதவிகிதமாகவும்,

வரிக்கு பிந்தைய லாபம் 16.3 சதவிகிதமாகவும்

சேவை பிரிவின் லாபம் 38.1 சதவிகிதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களின் வட்டி செலுத்தும் செயல்பாட்டு திறனும் 4.1 சதவிகிதம் அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் அசையா சொத்துகள் 10 சதவிகித வளர்ச்சி கண்டதாகவும், ரிசர்வ் வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பங்கு சந்தை வர்த்தகத்தில் பட்டியல் இடப்படாத நிறுவனங்களின் லாபமும் துரித வளர்ச்சியோடு கட்டமைப்பு எரிசக்தி துறை செயல்திறனும் அதிகரித்ததாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

***********

**மன்சூக் மாண்டவியா**

இயற்பியல் விஞ்ஞானி சர்.சி.வி ராமனின் ராமன் விளைவுகள் அரிய கண்டுபிடிப்பை குறிக்கும் வகையில் நாளை மறுநாள்திருச்சியில் நடைபெற உள்ள மாபெரும் நடை பயணத்தில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா பங்கேற்கிறார்.

நம் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய தேச தலைவர்களின் பங்களிப்பை இளம் தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் வகையில்

நாடுமுழுவதும் மத்திய இளைஞர் நலத்துறை சார்பில் நடைபெறும் நிகழ்வுகளின் ஒருபகுதியாக இந்த நடைபயணம் இடம்பெறுகிறது.

நேரு யுவகேந்திரா அமைப்பு சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இதன் துணை இயக்குனர் திரு.எம்.திருநீலகண்டன் தெரிவிக்கையில்:

**வாய்ஸ்**

***********

**அமித்ஷா**

கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, இன்றுமாலை அங்கு வருகிறார்.

கோவையில் நாளை பிஜேபியின் கட்சி அலுவலகத்தை திறந்து வைக்கும் அவர் கட்சி சார்ந்த பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.

இதனை முன்னிட்டு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன்,

பிஜேபி மூத்த தலைவர் உள்ளிட்டோர் இன்று கோவை வந்தனர்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை நோக்கி பிஜேபி வெற்றிகரமாக சென்று கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

திமுக அரசு தமிழகத்தில் மொழி அரசியல் செய்வதாக அவர் குறை கூறினார்.

***********

**பிரயாக்ராஜ்**

பிரயாக்ராஜில் நடைபெறும் வரலாற்று சிறப்புமிக்க மகா கும்பமேளா நாளை நிறைவடைகிறது.

மகா சிவராத்திரி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடுவார்கள் என்பதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

***********

**போராட்டம்**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டமீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவிக்க கோரி ராமேஸ்வர மீனவர்கள் இரண்டாவது நாளாக இன்றும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

700க்கும் மேற்பட்ட விசை படகு மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை.

நாளொன்றுக்கு ஒருகோடி ரூபாய்க்கு மேல் வருவாய் இழப்பு ஏற்படுவதால், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

***********

**வானதி ஸ்ரீனிவாசன்**

கோவை ராம்நகர் பகுதியில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பூங்கா மேம்பாட்டிற்காக தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்கள் பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திருமதி வானதி ஸ்ரீனிவாசன் சார்பில் வழங்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர் திரு.பொன்ராதாகிருஷ்ணன் கோவை மாநகரம் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அமைச்சர்கள் மூலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டார்.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் புனித ரமலான் நோன்பு கஞ்சி வழங்க அரசின் சார்பில் பள்ளிவாசல்களுக்கு 7 ஆயிரத்து 920 மெட்ரிக் டன் பச்சரிசி வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இதன்மூலம் அரசுக்கு 18 கோடியே 41 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

சென்னை கோபாலபுரத்தில் 7 கோடியே 79 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள தமிழகத்தின் முதல் குத்து சண்டை விளையாட்டு அரங்கையும் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

2 ஆயிரத்து 500 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்கில் உடற்பயிற்சிகூடம் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முன்னதாக அம்பத்தூரில் 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிலான சென்னை தகவல் தரவு மையத்தைமுதலமைச்சர் காணொலி வாயிலாக இன்று திறந்துவைத்தார்.

***********

**ஜாக்டோ ஜியோ ஆர்ப்பாட்டம்:**

தமிழ்நாட்டில் அரசு காலி பணியிடங்களை நிரப்புதல், பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கத்தினர் பல்வேறு பகுதிகளில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளக்குறிச்சி, தஞ்சை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

***********

**கிஸான் சம்மான்**

பிரதமரின் 19ஆவது தவணை வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 22 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதி கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக தேனி, திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள்தெரிவிக்கின்றனர்.

**வாய்ஸ்**

***********

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள்** குறைதீர் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையில் நடைபெறும்.

**திருப்பத்தூரில் மதுவிலக்கு மற்றும்** ஆயத்தீர்வை துறை சார்பில் அரசு அலுவலர்கள் மற்றும் மாணாக்கர் பங்கேற்ற போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி துவக்கிவைத்தார்.

***********

**தீ விபத்து**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில்சாக்கு கிடங்கில் இன்று அதிகாலை நேரிட்டதீ விபத்தில் 3 கோடி ரூபாய்க்கு மேலான பொருட்கள் தீக்கிரையாயின.

திருச்செங்கோடு, குமாரபாளையம் வெப்பமடை பகுதிகளை சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் 6 மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை அணைத்தனர்.

***********

**தண்ணீர் திறப்பு**

திருப்பூர் மாவட்டம் அமராவதி ஆற்றின் முதல் 8 பழைய ராஜ வாய்க்கால்களின் பாசன பகுதிகளுக்கு இன்றுமுதல் அடுத்த மாதம் 30ஆம் தேதிவரை தகுந்த இடைவெளியுடன் 300 கன அடி வீதம் 21 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

அமராவதி புதிய பாசன பகுதிகளுக்கும் இன்றுமுதல் 10 நாட்களுக்கு வினாடிக்கு 440 கன அடிவீதமும் தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

இதன்மூலம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 32 ஆயிரத்து 770 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

***********

**சிவாலய ஓட்டம்**

மகாசிவராத்திரியை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உலக பிரசித்திபெற்ற சிவாலய ஓட்டம் இன்றுமாலை அம்மாவட்டத்தின் திருமலையிலிருந்து தொடங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**நீலகிரி**

இமயமலை நீலகிரி மலைத்தொடர்களில் மட்டுமே பூக்கும் ரோடோ டென்ட்ரான் மலர்கள் அவலாஞ்சி, முக்கூர்த்தி வனப்பகுதிகளில் பூத்துக்குலுங்குவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- - **வாய்ஸ்** - -

**ராமேஸ்வரம் மழை**

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம், தங்கச்சி மடம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதால் வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- **வாய்ஸ்** - -

**********

**வானிலை**

தெற்கு கேரளம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென்தமிழக கடலோர மாவட்டங்கள் டெல்டா

மாவட்டங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை புதுக்கோட்டை ராமநாதபுரம் தூத்துக்குடி திருநெல்வேலி கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் **நாளைமறுநாள்** தொடங்கி மூன்று நாட்களுக்கு கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

***********

**பேட்மிண்டன்**

ஜெர்மன் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் **Krishnamurthy,Sai Pratheek** இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

**கிரிக்கெட்**

பெங்களூருவில்மகளிர் பிரிமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - குஜராத் ஜெயன்ட்ஸை இன்று இரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

***********

**கால்பந்து**

ISL கால்பந்து போட்டியில் பெங்களூரு அணி – சென்னை அணியை இன்று இரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********